பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

12 11 2025 7.15

புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, Botswana அதிபர் திரு Duma Boko-வுடன் இன்று Gaborone -வில் பேச்சு நடத்தினார்.

2) நாடுமுழுவதும் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

3) ஒன்பது மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

4) கியூபாவுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு Pabitra Margherita தெரிவித்துள்ளார்.

5) Bondi ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Rathika Seelan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, Botswana அதிபர் திரு Duma Boko-வுடன் இன்று Gaborone -வில் பேச்சு நடத்தினார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இருதலைவர்களும் விரிவாக பேச்சு நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத் தொடர்ந்து சுகாதாரம் மற்றும் மருந்து துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டன.

முன்னதாக, அங்கோலாவில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு Botswana சென்ற குடியரசுத் தலைவருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

>><><><><><<

தாவர வகைகளை பாதுகாப்பதற்கான சட்டம் முதன்முதலில் இந்தியாவில் தான் இயற்றப்பட்டதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

*இன்று புதுதில்லியில் நடைபெற்ற தாவர வகைகள் மற்றும் விவசாயிகள் உரிமை ஆணையத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*விதை பாதுகாப்பிற்காக 15 லட்சம் ரூபாய் வழங்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*இந்த நிதியை பயன்படுத்தி விவசாயிகள் விதைகளை பாதுகாக்க முடியும் என்றும் அவர் கூறினார்.*

*30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல் வகைகளை இந்தியா கொண்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.*

*>><><><><><<*

*நாடுமுழுவதும் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.*

*இன்று திரிபுராவில் சுற்றுலா மேம்பாடு திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.*

*திரிபுராவில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும் இதனை அதிகாரிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.*

*>><><><><><<*

*பஞ்சாபில் Ferozepur-Patti ரயில் இணைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே இணையமைச்சர் திரு ரவ்நீத் சிங் பிட்டு கூறியுள்ளார்.*

*இன்று சண்டிகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 25 கிலோமீட்டர் தொலைவை இணைக்கும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.*

*இதற்காக 764 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது Ferozepur-Antisar இடையேயான பயண நேரம் வெகுவாக குறையும் என்றும் அவர் கூறினார்.*

*இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணியினை விரைவில் முடிக்குமாறு பஞ்சாப் அரசுக்கு ரயில்வே கடிதம் எழுதியுள்ளதாகவும் திரு ரவ்நீத் சிங் பிட்டு தெரிவித்தார்.*

*>><><><><><<*

கியூபாவுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு *Pabitra Margherita* தெரிவித்துள்ளார்.

அரசு முறைப் பயணமாக கியூபா சென்றுள்ள அவர், இன்று ஹவன்னாவில் அந்நாட்டு துணைப்பிரதமர் திரு *Oscar Perez Oliva Fraga* மற்றும் திரு *Eduardu Martinez Diaz* ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் கட்டமைப்பு, சுகாதாரம், மருந்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் திரு *Pabitra Margherita* கூறியுள்ளார்.

>><><><><<

பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்தியா – வியட்நாம் இடையேயான பேச்சுக்கள் இன்று *Hanoi* -வில் நடைபெற்றது.

அரசுமுறைப் பயணமாக வியட்நாம் சென்றுள்ள பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங், அந்நாட்டு தலைவர்களுடன் இதுகுறித்து விரிவாக பேச்சுக்கள் நடத்தினார்.

கப்பல் கட்டுமான துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பேச்சுக்களும் இதில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

சுகாதார சேவைகளை வழங்குவதில் செவிலியர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய சுகாதாரத் துறை செயலர் திருமதி புன்யா சலிலா ஶ்ரீவஸ்தவா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செவிலியர் பணி தொடர்பான 3 நாள் தேசிய பயிலரங்கை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

செவிலியர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் திருமதி புன்யா சலிலா ஶ்ரீவஸ்தவா தெரிவித்தார்.

>><><><><<

மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் கீழ் குறைந்த செலவில் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்படுவதாக சுகாதாரத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

200 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இவை விநியோகிக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

பொது சேவை ஒலிபரப்பு தினம் இன்று புதுதில்லி ஆகாஷவாணியில் கொண்டாடப்பட்டது.

தேசப்பிதா மகாத்மாகாந்தி 1947 ஆம் ஆண்டு ஆகாஷவாணியில் இதேநாளில் உரையாற்றியதை கொண்டாடும் வகையில் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இதற்கான அறிவிப்பினை மறைந்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் கடந்த இரண்டாயிரமாவது ஆண்டில் வெளியிட்டார்.

அன்று முதல் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

>><><><><><<

ஒன்பது மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தமிழகம், ராஜஸ்தான், சத்தீஷ்கர் உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம், மத்தியப்பிரதேசம், கேரளா, குஜராத், கோவா ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் நிகோபார், லட்சத்தீவுகள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை 72 சதவீத வாக்காளர்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லட்சத்தீவில் அனைத்து வாக்காளர்களுக்கும், கோவாவில் 99 புள்ளி ஒன்பது ஒன்பது சதவீத வாக்காளர்களுக்கும் விண்ணப்பப்படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளில் 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

>><><><><><<

உத்தரப்பிரதேசத்தில் மகளிர் மேம்பாட்டுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் பெண்கள் இரவு 7 மணி முதல் காலை 6 மணிவரை பணிபுரிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இரவு நேரங்களில் பணிபுரியும் பெண்களுக்கு இருமடங்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

பிரதமரின் இல்லந்தோறும் சூரிய மின்சக்தி திட்டம் ஜம்மு கஷ்மீரில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இத்திட்டத்தினகீழ் பயனடைந்துள்ளன.

இதில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் மின்கட்டணம் எதுவும் செலுத்தாமல் பயனடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன் காரணமாக இத்திட்டத்தில் இணைய பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>><><><><<

குஜராத் மருந்து தொழிற்சாலை ஒன்றில் பாய்லர் வெடித்ததில் நேரிட்ட விபத்தில் 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

Bharuch மாவட்டத்திற்கு உட்பட்ட மருந்து தொழிற்சாலையில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>><><><><<

மேற்கு வங்கத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் நேரிட்ட விபத்தில் 3 வயது பெண் குழந்தை உயிரிழந்தது. ஆறு பேர் காயமடைந்தனர்.

கொல்கத்தாவின் Rameswarpur -ல் உள்ள வீட்டில் இன்று பிற்பகல் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>><><><><<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் குளிரின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளத.

மத்தியப்பிரதேசம், ஹரியானா, சத்தீஷ்கர், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு கடும் குளிர் நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தில்லியில் காற்று மாசு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.*

*>><><><><><<*

*விளையாட்டுச் செய்திகள்*

*Bondi ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Rathika Seelan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-7, 11-3, 11-3 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Anantana Prasertratanakul-ஐ வென்றார்.*

*----------------*

*ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*---------------*

*இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dhruv Negi இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*----------------*

*ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் ரோஹித் ஷர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.*

*விராட் கோலி ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*>> <<*